யாதும் ஊரே யாவரும் கேளிர்

ஆரோவில்
செய்திமடல்

கிளை - 27 | ஜூன் – 2024 | இலை - 9

திருஞானசம்பந்தரின் திருச்சுவடுகள்



ஆரோவில் ஞானத்தேடல் தமிழ்க்கூடல் மேடை



திருக்குறள்

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் **(இன்னாசெய்யாமை 318)**

தனக்கு எது கொடுமை என்று ஒருவன் உணர்கிறானோ, அதனை மற்றவர்கள் துன்பம் அடையுமாறு செய்தல் பொருந்தாது.

உரை: **கவிஞர் சிற்பி**

ஆசிரியர் பக்கம்

திருவள்ளுவர் வரலாறு

மீண்டும் மீண்டும் திருவள்ளுவப் பெருந்தகையே கருத்தில் தொடர்கிறார். ஏப்ரல் மடலில் திருக்குறளில் மொழி எனும் சொல் எத்தனை முறை எடுத்தாளப்படுகிறது என்று எழுதியிருந்தேன். பல நண்பர்கள் பாராட்டுரைத்தார்கள் அதன் வழியே எனது இலக்கியப் பயணத்தில் கண்டறிந்ததை எழுதுகிறேன். புதுவையிலுள்ள 92 வயது பெரியவர், தமிழறிஞர் ஆய்வாளர் ஞானமார்க்கி திரு. பா.கமலக்கண்ணன் அவர்கள் தொலைபேசியில் அழைத்தார்கள். திருவள்ளுவர் வரலாறு தொடர்பாகத் தாம் தொடர்ந்து வெளியிட்டுவரும் நூல்கள் பற்றி எனக்குச் சொன்னபோது எனக்கு உள்அறிவு ஒளி கூடியது. மறுநாளே எனக்கு அவருடைய மூன்று புத்தகங்கள் வந்து சேர்ந்தன. இரவு பகலாய் வெயில் தகிப்பையும் வியர்வையாக்கிப் படித்து முடித்த கையோடு இந்நூல்களில் உள்ள சாராம்சங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள ஆவலுறுகிறேன்.

குறள்நெறிச் செம்மல் பா. கமலக்கண்ணன் அவர்களிடமிருந்து இப்போது நாம் பெற்றுள்ள நூல்கள்

1. திருவள்ளுவர் உண்மை வரலாறு, வெளியீடு : தாமரை நூலகம் சென்னை, ஆண்டு - 2020
2. நூறு சித்தர்களின் ஞானத்தவ அனுபவங்கள், வெளியீடு - வானதி பதிப்பகம் சென்னை, ஆண்டு - 2023.
3. திருவள்ளுவர் வரலாற்றுச் சுருக்கம், வெளியீடு - வானதி பதிப்பகம், ஆண்டு- ஏப்ரல் 2024.

இந்நூல்கள் ஆசிரியரின் பல ஆண்டு சித்த இலக்கிய ஆய்வுகளைக் கனிச்சாறாக வழங்குகின்றன. திருவள்ளுவர் வரலாற்றுச் சுருக்கத்தில், ஞானவெட்டியான் நூலைத் தந்தவரும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும் ஒருவரே என்பதை உறுதிபட விளக்குகிறார் ஆசிரியர் என்று, தமது அணிந்துரையில் கூறுகிறார் முனைவர் த. இராஜாராம் அவர்கள் (பணிநிறைவு - தமிழ்த்துறைத்தலைவர் மதுரை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி) திருவள்ளுவரின் வாய்மொழியாக ஞானவெட்டியான் பாடல்களிலிருந்தும் பிற நூல்களிலிருந்தும் தொகுத்துள்ள அறிஞர் திரு. கமலக்கண்ணன் அவர்களின் ஞானத்தேடலின் சாராம்சமாக நாம்



அன்னையின் அருள்மொழி

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாழ்க்கைத் தத்துவம் உண்டு. இந்தியாவின் வாழ்விற்கு மூலமாக உள்ளது ஆன்மிகம்.

இந்தியாவில் எந்தப் பெரிய தேசிய மறுமலர்ச்சிக்கும் பின்னால் ஓர் ஆன்மிக இயக்கம் இருக்கும்.

தனது மையமான ஜீவன், தனது அந்தராத்மா விழிப்புற்றபோதுதான் இந்தியனுக்கு அவனுடைய முழுசக்தியும் வருகிறது.

ஆக்கரீதியான எல்லா இயக்கங்களின் தலைவர்களும் ஒரு சந்நியாசி அல்லது யோகியிடமிருந்தே அருள்ஊக்கம் பெற்றுள்ளனர். மராட்டியரின் சக்திக்குப் பின்னால் இராமதாசர் இருந்தார்; சீக்கிய எழுச்சிக்குப் பின்னால் குருநானக்கும் குருகோவிந்தரும் இருந்தனர். நேற்றைய இந்தியாவில்கூட வங்காளத்தின் உதாரணம் உள்ளது.

ஸ்ரீஅன்னை

தெரிந்துகொள்வதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

1. வள்ளுவர் பிறந்தது அமராவதி ஆறு ஓடும் கரூர் நாடு
2. வள்ளுவரின் குலம் – ‘‘அவ்வையாரின் குலத்தில் வந்த வள்ளுவம் எனும் ஆதிபீடம்‘‘
3. தாய் - பரை அம்பிகைதன் குலம், தங்க நிறம்
4. தந்தை - சாம்பசிவ மூர்த்தி சதுர்வேத சிகாமணி – சாதியினில் பரப்பிரம்மகுலம். சுத்தவீரசைவம்.
5. வள்ளுவர் இயற்பெயர் – சாம்பான் சாம்புவ மூர்த்தி
6. தொழில் – சேணியரைப் போன்று நெசவுத் தொழில் - மெய்ஞானத்தவம் செய்வதும் தமது குலத்தொழில்
7. இல்லறம் - நல்லறம் (12ஆண்டுகள்) பின்னர் அகத்துறவு.
8. மெய்க்குரு – அகத்தியர்
9. காயகல்பம் உண்டதால் 1591 ஆண்டுகள் வாழ்ந்து சித்தி பெற்றுள்ளார்
10. மருத்துவர் வள்ளுவர் பதினெண்சித்தரும் பாராட்டும் சித்தமருத்துவர்.

திருவள்ளுவர் துறவியாகத் தங்கியிருந்த ஊர்கள்:-

» தனுஷ்கோடி

» கரூர்க்காடு

» வடமயிலார்புரம் (மயிலாப்பூர்)

» திருவொற்றியூர்

» திருமலை (மேல்திருப்பதி) பாபநாச தீர்த்தம் - குகை (மவுனவிரதம் தொடங்குகிறார்)

» திருச்சி மலைக்கோட்டை வாயில்

» தஞ்சாவூர் சிவகங்கைத் தீர்த்தம்

» சிதம்பரம் ஆலயம் (பல்லாண்டுகள்)

» ஆவுடையார்கோயில்

» தஞ்சாவூர் – திருவையாறு (பலஆண்டுகள்)

» கொடுமுடி

» திருவாட்போக்கி

» நிறைவாக – அக்னித்தீர்த்தம் எனும் அமிர்த நதி கலந்துள்ள இராமேஸ்வரம்.

» தனுஷ்கோடியில் சமாதிஅடைதல்

நிறைவுப் பாடல்

‘‘அலையாப் பதியும் விட்டேன் அமிர்த நதி
அதுகடந்தே அக்கினி ஆற்றைவிட்டேன்
தொலையாக் கடலும் விட்டேன் சுகதுக்க
தூறும் விட்டேன் உடல்கூறுவிட்டேன்
நிலையா நதியும் விட்டேன் கரைஏறி
நீஞ்சி விட்டேன் கலைபாஞ்சி விட்டேன்.
சலசெங்க நதியும் விட்டேன் –
சலநதியின் சார்பும் விட்டேன் கரைஏறிவிட்டேன்’’

(ஞானவெட்டியான்–410)

குறிப்பு:-

சித்தி நிலையை அடைந்த ஞானிகள் இறுதி நேரத்திலும் சுயநினைவோடு இருப்பர் என்பது குருவாக்கு எனவே தனது இறுதிநிலைபற்றியும் பாடியுள்ளார்.

திருவள்ளுவர் வாழ்ந்த காலம் - (அகச்சான்று) இராஜஇராஜசோழன் 1010 ஆம் ஆண்டில் தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்தபோது உடனிருந்த சித்தர் கருவூர்த்தேவர் திருவள்ளுவர் வாழ்ந்த கரூரைச் சேர்ந்தவர் என்று அறியலாம். அவர் தம்முடைய நூலில் திருவள்ளுவரைப் பற்றிக் கூறுவதாவது.

‘‘பாரப்பா வள்ளுவர்தான் பண்புள்ள சூத்திரசாதி
நேரப்பா நெசவுசெய்து இல்லறம் இருந்துகொண்டு
சீரப்பா கற்பங்கொண்டு செடம் வலுக்கச் செய்து
நேரப்பாவேதைபார்த்து நெடுநாளும்இருந்தேவாழ்ந்தார்.

(கருவூரார் வாதகாவியம் 700இல் 595)

இப்பாடல் காயகல்பம் உண்ட வள்ளுவர் பல்லாண்டு காலம் வாழ்ந்தார் எனக்குறிப்பிடப்பட்டிருப்பதால் கி.பி.1010க்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே சமாதிக்குச் சென்றிருக்க வேண்டும் என்று தெரியவருகிறது.



ஆசிரியர் கமலக்கண்ணன் கடந்த முப்பது ஆண்டுகளாக ஆய்வு செய்து அறிவிப்பதாவது: திருவள்ளுவர் உலகில் 1591 ஆண்டுகள் வாழ்ந்தார் குரு அகத்தியரின் அறிவுரைப்படி திருக்குறளில் காமத்துப்பாலை இணைத்தார், திருமூலர் கூறியபடி எளிய மக்களுக்காக ஞானவெட்டியான் முதலான நூல்களை வழக்குத் தமிழில் உருவாக்கினார்.

இவ்வாசிரியரின் ஆய்வு நூல்களுள் வள்ளுவர்பற்றிய சிறப்புக் கருத்துகளை வெளிப்படுத்துவன கீழ்வரும் நூல்களாகும்.

1. சித்தர் நூல்களில் அகத்தியர் – திருவள்ளுவர் வரலாறு. ஆண்டு – 1993, சென்னை. வானதி பதிப்பகம்.
2. வான்புகழ் வள்ளுவர் வாழ்க்கை வரலாறு ஆண்டு – 2006 சென்னை. வானதி பதிப்பகம்.
3. Autobiography of Tiruvalluvar – 2018 – 24 x 7 Publishing.com, Kolkatta.
4. திருவள்ளுவர் உண்மை வரலாறு, ஆண்டு – 2020. சென்னை தாமரை நூலகம்
5. திருவள்ளுவர் ஞானக்கோவை, ஆண்டு – 2022, சென்னை. தாமரை நூலகம்.

திரு. பா. கமலக்கண்ணன் அன்புடன் எம் நூலகத்திற்கு அனுப்பியுள்ள அவரது படைப்புகளைப் படிக்கத் தொடங்கிய நாளிலிருந்தே எங்களுக்கெல்லாம் சித்தர்களின் தரிசனம் கிடைத்து வருகிறது. ஏதோ புரிபடுகிறமாதிரி தோன்றுகிறது. திருக்குறளை நாளும் ஓதும் நமக்கு ஐயன் யார் என்ற கேள்வி கூடவே தொடர்ந்து வருவதால் திரு. கமலக்கண்ணன் அவர்களின் ஆய்வும் வாக்கும் ஒரு புதிய வாசலைத் திறந்து விட்டிருப்பதாக உணர்கிறோம். ஆசிரியர் திரு. கமலக்கண்ணன் அவர்களுடன் தொடர்புகொள்ள விரும்புவோர்க்கு உதவும் வகையில் அவரது முகவரியைத் தந்துள்ளோம்.

திரு. பா. கமலக்கண்ணன்
16, கிழக்குத் தெரு, பழைய சாரம்
புதுச்சேரி - 605 013
0413 2248046

என்ன வாசகர்களே!

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.“

என்று பாடிய மகாகவி பாரதியும் உடனின்று கலகலவென்று சிரிப்பது கேட்கிறதா?

மகிழ்ச்சியும் வணக்கமும்
இரா.மீனாட்சி

வாசகர் குரல்

மே - 24 ஆரோவில் செய்தி மடல் படித்தேன். முள்ளிலும் மலர்ந்த செம்மலர்கள் தலையங்கம் அற்புதம். கபீர்தாசர் பற்றிய செய்திகள் படிக்க படிக்க இன்னும் அவரைப்பற்றி படித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கியது. நன்றி மழையே! என மாணவச் செல்வங்கள் எழுதியிருக்கும் பாடல்கள், வரிகள் அனைத்தும் அருமை. ஆரோவில் செய்தி மடலுக்கு வாழ்த்துகள்.

மா.பழனி, தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சின்னப்பள்ளத்தூர், செங்கனூர் அஞ்சல், பென்னாகரம் வட்டம், தர்மபுரி மாவட்டம்

வீரமகளிர் வரலாறு நெஞ்சைத் தொட்டது. ஒவ்வொரு சுதந்திரப்போராட்ட வீரப் பெண்மணியைப்பற்றியும் கவிதை

வாசகர் குரல்

எழுதவேண்டும் என்று ஆவலாக இருக்கிறேன். எனக்கு அந்தப்புத்தகத்தை அனுப்பித்தாருங்கள்.

சாரம் அடிகளார், சாரம் – திண்டிவனம்.

வீர மகளிர் பற்றிய ஆசிரியர் பக்கம் நெகிழ்ச்சி அளித்தது. அனைவரைப் பற்றியும் எப்பொழுதாவது நாம் முழுமையாக படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று தாகம் ஏற்படுகிறது. அவர்களுக்கு நாம் எப்படி நன்றி செலுத்துவது என்ற பேருணர்வை இக்கட்டுரை தோற்றுவித்தது. நன்றி.

சாந்தா நரசிம்மன். கோவை.

செய்தித்துளிர்

நமது மையத்தில் கோடைமுகாம் எனும் சிறுவர் மகிழ்ச்சி முகாம் 2024 மே 20 முதல் ஜூன் 2 வரை நடைபெற்றது. இந்த முகாமில் ஆரோவில்லைச் சுற்றியுள்ள கிராமத்திலிருந்து 20 மாணாக்கர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றார்கள். முகாமில் அவரவர்க்குத் தேவையான தையல் கைவேலை கற்றுக்கொண்டார்கள். ஓவியக்கலை மூலம் வாழ்த்து அட்டைகள் செய்யும் பயிற்சியும் பெற்றார்கள். ஆரோவில் மாத்ரிமந்திர் தியான மையத்திற்குச் சென்று உள்அமைதியை வளர்த்துக்கொண்டார்கள். நிறைவு நாளன்று கண்காட்சிகளும் கலைநிகழ்ச்சிகளும் நடை பெற்றன. நட்பு வட்டத்தினர், பெற்றோர்கள் கலந்துகொண்டுச் சிறப்பித்தார்கள். புதுவை, காலாப்பட்டு தமிழ் ஆர்வலர் திரு. அண்ணாமலை சுகுமாரன் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். அகில இந்திய வானொலி நிலைய செய்திப்பிரிவு துணை இயக்குநர் திரு. தி. சிவக்குமார் அவர்கள் சான்றிதழ் வழங்கினார்கள். உலகக் குழந்தைகள் தினத்தன்று நடைபெற்ற பயிற்சிமுகாம் நிறைவு நாளில் குழந்தைகளின் பட்டிமண்டபத்திற்குத் தீர்ப்பு வழங்கினார் பாலபுரஸ்கார் சாகித்திய அகாதமி விருதாளர் முனைவர் சொ. சேதுபதி அவர்கள். எத்தனை பொருத்தம்? அனைத்துலகக் குழந்தைகளின் நலனுக்காகப் பிரார்த்தனை செய்து அமைதி காத்து விடைபெற்றனர் பயனாளிகள்.

அரவிந்தர் சிந்தனைப் பொறிகள்



பூமியின் பரிணாமத்தின் அடுத்தபடி மனிதன் அதிமனிதனாக மாறுவதுதான். இதுவே நமது விதி. ஆர்வம் மிகுந்த ஆனால் கட்டுப்படுத்தப்பட்ட மனித வாழ்வை விடுவிக்கும் திறவுகோல் அங்குதான் உள்ளது. இதுவே அந்தராத்மாவின் நோக்கமும் இயற்கையின் தர்க்கரீதியான வளர்ச்சிப் போக்குமாகும். எனவே இது தவிர்க்கவியலாதது.

அனுபவ மணித்திரள்கள்

உலகப் பழமொழிகள்

ஆ

ஆசை – செம்மறி ஆட்டுக்கு இரண்டு குட்டிகள். ஒன்றினுடைய தோல் பறையை மூடுகிறது; மற்றொன்றின் தோல் புனித வேதாகமத்திற்கு மேலுறை ஆகிறது. **-செர்பியன்**

ஆடு – ஆடு தீனியும் தின்கிறது
பணமும் செலுத்தி விடுகிறது.
- அல்பேனியன்

ஆடை – குணங்களை ஆடை மூடுகிறது. **- ஜமைக்கா**

ஆணி – ஆணி குதிரை லாடத்தைக் காக்கலாம்; குதிரை தன்மீது சவாரி செய்யும் ஒரு வீரனைக் காக்கலாம்; சவாரி செய்பவன் நாட்டைக் காக்கலாம். **- டுர்கிஸ்**

ஆண் – ஆண்கள் மலைகள்; பெண்கள் அவர்களை நகர்த்தும் நெம்புகோல்கள் **- பாஸ்டோ**

திருக்கோவில் பண்பாட்டுப் பயணம்.

திருவக்கரை

திருஞானசம்பந்தர் வழிபட்டுப் பண்ணிசைத்து நெடும்பெருமை சேர்ந்த வானூர் மண்டலத்தில் உள்ள பழம்பதிகளான திருஇரும்பை மாகாளம், திருஅரசிலி கண்டுணர்ந்தபின் இம்முறை நிறைவுப்பயணமாக 30.03.2024 சனிக்கிழமை வெயில் மதியத்திற்கு மேல் திருவக்கரை ஞானச் சுற்றுலா நிகழ்வு தொடங்கியது. ஆரோவில் யூனிட்டி பெவிலியனில் முன்னர்போலவே அறிமுகவுரை அரங்கம் நடைபெற்றது. காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையாளர் முதுமுனைவர் சொ. அருணன் நோக்கவுரையுடன் வரவேற்புரையும் நல்கினார். சென்னை செம்மொழி இயக்ககம் சார்பில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம் ஐயா அவர்கள் எழிலுரை வழங்கினார்கள். திருநாவுக்கரசரின் வரலாற்றினை எடுத்துரைத்து, திருஞானசம்பந்தர் உடனான அவரது அன்பின் பெருமையையும் சிறப்பாக மனங்கொள்ளும் வண்ணம் கூறினார். புதுவை தாகூர் கலைக்கல்லூரி, ஆரோவில் உதவிப்பள்ளி ஆசிரியர்கள், மாணாக்கர்கள், அரவிந்தபுரம் இளங்கதிர்மன்றக் கலைவகுப்புப் பயிற்சியாளர்கள், புதுவை அருங்காட்சியகத்தினர், பலவேறு கிராம மகளிர் மன்றத்தினர், ஆரோவில் வாசிகள் மற்றும் இவர்களுடன் இளைஞர்கள் கல்வி மையத்தினர் கலந்துகொண்டனர். நமது மையத்தின் நட்பு வட்டத்தினைச் சேர்ந்த சின்னஞ்சிறு குழந்தைகள் சம்பந்தர் பெருமானாகத் தங்களை அலங்கரித்துக்கொண்டு மேடையையும் நெடுவழியையும் தேவாரப் பதிகங்களால் பக்தி மலர்த்தூவி பாடிஆடி வந்தனர். பார்க்கப் பார்க்கப் பரவசமாயிருந்தது.





நிலையத்தில் பானகம் குடித்து முடித்ததும் முன்மாலை 3.15 அளவில் நேராக 2 பேருந்துகளிலும் மூன்று மகிழுந்துகளிலும் திருவக்கரை புறப்பட்டோம். உலகத்திலேயே கோடிக்கணக்கான ஆண்டு மூத்த கல்மரங்களைக் கொண்டுள்ள மிகச் சில பகுதிகளில் திருவக்கரையும் ஒன்று. கல்தோட்டத்தைப் பார்த்து இயற்கையின் வினோதங்களை ஓரளவு உணர்ந்துகொண்ட பயனாளிகள் முன்னூறு ஆண்டு பழமையான ஐயனார் கோவில் ஆலமர விழுதுகளினூடே ஒளிந்து விளையாடினார்கள் இலட்சக்கணக்கான பழமையான மரங்கள் கல்லாய் இறுகிக்கிடப்பதை வியப்புடன் பார்த்தார்கள் சிற்றுண்டி அருந்திய மகிழ்ச்சியுடன் திருக்கோவில்

சென்றோம். சௌந்திரநாயகி உடனாகிய சந்திரமௌலீஸ்வரர் திருக்கோவில் பெரிய வளாகம், தேர்மண்டபம், கொடிமரம், பலிபீடம் கொண்டது. கிழக்கு முகப்பில் உள்ள வக்கிரகாளி பிரம்மாண்டத் தோற்றம் உடைய சிலாரூபம். உள்ளே சென்றால் நிறைய கல்வெட்டுகள் கொண்ட சுற்றுச் சுவர்கள். சோழர்காலத்திலிருந்து பலவேறு செய்திகளைச் சொல்லிய கல்வெட்டு எழுத்துகளை வாசித்துக் காட்டி விளக்கவுரை செய்த பெருமை வில்லியனூர் புலவர் வேங்கடேசன் ஐயாவைச் சேர்ந்தது. மூலவர்களை வணங்கி செம்பியன் மாதேவி அமைத்த மண்டபப் பிராகாரத்தில் அமர்ந்து இறைஉணர்வில் நிலைத்தனர் நம்மக்கள். முன்னிரு கோவில்களில் நிகழ்த்தியதைப் போலவே கூத்தபிரானின் நாட்டிய வழிமுறையை செல்வி அ.தமிழ்த்தாமரை பொலிவுடன் பரதமாக்கினாள். அரவிந்தபுரம் திரு. கோபிநாதன் அழைத்து வந்த மாணவச் செல்வங்கள் தேவமந்திரங்களை வழிபாட்டு மலர்களாக்கி அற்புதமான குழுநடனங்களாக அளித்தார்கள். குட்டிப்பெண் அருணஆதவி ஞானசம்பந்தரின் ஒப்பனையுடன் தனது நாட்டியப் பயிற்சியை ஒத்திசைந்து மகிழ்ந்தாள்,

பெரிய பிரசாதப் பாத்திரம் வழிய வழிய சர்க்கரைப் பொங்கல் வந்து சேர்ந்தது. தொன்னை நிரம்ப நம்முடன் வந்த 120 கருத்தாளர்கள் மட்டுமின்றி ஏனைய பக்தர்களும் வாங்கி உண்டு மனநிறைவுடன் வாழ்த்திச் சென்றனர் பின்மாலைப் பொழுதில் நினைவுப்பொருளாக ஆய்வுக்கட்டுரைகள், திருவக்கரை சம்பந்தப் பெருமான் பதிகங்கள், படங்கள் மற்றும் அவரவர் இடத்தில் மரம் வளர்க்க செம்மண் விதைப்பந்துகள் இவற்றோடு ஸ்ரீ அன்னையின் இலட்சியக்குழந்தை - புதிய அழகிய வண்ண ஓவியப் புத்தகமும் நாம் அளித்த கைப்பையில் நிரப்பிப் பரிசாகப் பயனாளிகள் உடன் எடுத்துச் சென்றனர் நன்றிப் பகிர்வும் வாழ்த்துப் பாடல்களும் திசை நிரப்ப ஆரோவில் திரும்பினோம். தமிழ்க்கூடல் முதல்பாகம் நிறைவுற்றது. ஞானத்தேடல் மேலும் தொடரும். இத்திருப்பயணம் சிறப்பாக நிறைவுற ஒத்துழைப்பு நல்கிய அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றி. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் ஒவ்வொரு நிகழ்விலும் ஆத்மார்த்த சேவைபுரிந்த இளைஞர் குழாத்திற்கு நமது வாழ்த்தும் பாராட்டும்.

ஸ்ரீ அரவிந்த அன்னை அருள்.

(தொடர் நிறைவு) தமிழ்க்கூடல் குழுவினர்.

மதுரை மல்லி வாசம் உலகெங்கும் வீசும்.

மதுரை மல்லிகைப்பூ விவசாயத்தில் நிலைத்த பெருமை பெற்றுள்ளது. மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களிலிருந்து தினந்தோறும் 500 - 1000 கிலோ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டையில் இயங்கும் பூமார்க்கெட் மல்லிகைப் பூக்களின் மிக முக்கிய வியாபாரகேந்திரம். இப்பகுதிக் கிராமப் பெண்கள் மல்லிகைப் பூக்களை சரம் கட்டும் தொழிலை திறமையாகச் செய்து வருகின்றனர். மதுரை, உசிலம்பட்டி, அருப்புக்கோட்டை போன்ற சுமார் 300 கிராமங்களில் மல்லிகைப் பூ விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் தினமும் தரமான மல்லிகைப் பூ மொக்குகளைப் பறித்துக் காலையில் நிலக்கோட்டைப் பூ மார்க்கெட்டுக்கு கொண்டு வருகின்றனர். இங்கு இயங்கும் சில ஏற்றுமதி நிறுவனங்கள் அவற்றைத் தேர்ந்தெடுத்து வாங்கி தங்கள் தொழிற்கூடங்களில் உள்ள பெண்கள் மூலமாக சரம் தொடுத்து ஏற்றுமதிக்குத் தயார் செய்கின்றனர்.

இங்கு பணிபுரியும் கிராமப் பெண்கள் விளாம்பட்டி, சிலுக்குவார்பட்டி, பிள்ளையார் நத்தம் போன்ற சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து காலையில் வேலைக்குச் வருகிறார்கள் பூக்கட்டும் வேலையைத் தொய்வின்றிச் செய்து முடிக்கின்றனர். பூச்சரங்களாகவும் மாலைகளாகவும் தயாரித்து, ஏற்றுமதி செய்கின்றனர். வெளிநாடுகளில் உள்ள பல கோயில்களுக்கும் வீட்டு விசேஷங்களுக்கும் ஏற்றபடி பூமாலைகள் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் இவை தரை மார்க்கமாக மதுரை, திருச்சி, சென்னை, கொச்சி மற்றும் திருவனந்தபுரம் விமான

நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. விமானம் மூலமாக கனடா, பிரிட்டன், மலேசியா மற்றும் அரபு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

வெளிநாட்டில் உள்ள ஏஜெண்டுகள் இவற்றைப் பெற்று நுகர்வோருக்கு வழங்குகின்றனர். வெளிநாட்டில் உள்ள மீனாட்சி கோவில், பாலாஜி கோவில், முருகன் கோவில்களுக்கும் செல்கின்றன.

இது போன்ற பூ வியாபாரத்தை நம்பி இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மல்லிகை, ஜாதிமல்லி, சம்பங்கி போன்றவை அதிக அளவில் விற்பனை செய்யப்படுகின்றன. சுமார் 1700 விவசாயிகள் மலர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மலர் வியாபாரம் ஒவ்வொரு பருவ காலத்திற்கேற்ப ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. எப்படியிருந்தாலும் மதுரை மல்லிகைப்பூ என்றாலே அதற்கு ஈடுஇணை இல்லை என்றே சொல்லலாம்.

தகவல் – **டாக்டர் லட்சுமி நரசிம்மன்**
வேளாண் வல்லுநர், கோயமுத்தூர்.

சிறுவர் இலக்கியம்

அவரைப்பிஞ்சு!

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
அழகாய் பாத்தி அமைத்தேன்
ஆசை ஆசையாய் அதில்
அவரை விதையை விதைத்தேன்

சொட்டுச் சொட்டாய் மழைபெய்து
தட்டித் தட்டி எழுப்பியது
சின்ன அவரைப் பாப்பா
தலை நிமிர்ந்து பார்த்தது

கதிரவனின் கதிர் கண்டு
தலை அசைந்து மகிழ்ந்தது
மேலும் வளர ஆசையோடு
ஊன்று கோல் கேட்டது

பற்றிப் படர எண்ணியது
பந்தல் ஒன்றும் கேட்டது
படர்ந்து வளர்ந்த அவரைக்கொடி
பார்க்க மனதைக் கவர்ந்தது

கொத்துக் கொத்தாய் வெள்ளை நிறத்தில்
பூத்துக் குலுங்கிச் சிரித்தது
பூவிலிருந்து அவரைப் பிஞ்சு
தலையை வெளியில் நீட்டியது.

முனைவர் பேராசிரியர் **நா. இன்பமணி** விருதுநகர்.

அறிவோம் நம் தமிழ் – XX
தமிழில் பழந்தமிழ்க் கலைச்சொற்கள்

HUNTER — **வேடவன் | வேட்டைக்காரன்**
அடவிசார் | எயினன்
வேடுவர் | கூளியர்
புளிஞன் | வேட்டுவன்
பிடிகாரர் | நாயாடி
புளினர் | வேடர்

IGNORANCE — **மடமை**
அறியாமை | எய்யாமை
ஏழை | பேது
தொள்ளை | அமதி
இழுதை | மடம்
மாதுமை | மோடு
மைந்து | வெளிறு
பாமரம்
பேதைமை
சிதடு
கைம்மை
கொத்தை

நன்றி; ஆங்கில – தமிழ் வகுப்பிற்குப் பயன்பட்ட அகராதி.
International Advanced Deluxe Dictionary.

தனிச்சுற்றுக்கு மட்டும்

வெளியீடு : ஆசிரியர் குழு
ஆரோவில் செய்திமடல்
இளைஞர்கள் கல்வி மையம்
ஆரோவில் - 605101
விழுப்புரம் மாவட்டம்
தமிழ்நாடு
மின்னஞ்சல் : **tamil@auroville.org.in**
தொலைபேசி : *0413-2623773*
ஆசிரியர் : **இரா.மீனாட்சி**
வடிவமைப்பு : **சொ.அருணன்,** புதுவை.
அச்சு : **சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்,** சிவகாசி.